DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 10.10.20202

| | | |
|---|---|---|
| Case No. | : | OS.43/2022 |
| Deposition of Witness for Prosecution | : | PW.1 |
| Name | : | ஆஷா |
| தந்தை பெயர் | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of October 2022

முதல் விசாரணை

1.நான் அசல் வழக்கில் முதல் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியதை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. 27.01.2016 தேதியிட்ட வாதிகளின் பாட்டி சின்னபொன்னு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் **(வா.ச.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பிரதி வாதி தரப்பில் ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபணை குறியீடு செய்யப்படுகிறது.

3. 22.04.2016 - 1ம் வாதியின் பெயருக்கு ஏற்பட்டுள்ள வீட்டு வரி ரசீது அசல் நகல் **(வா.ச.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

4. 07.09.2017 – வாதிகளின் தரப்பில் சேலம் மாவட்ட சட்ட பணிகள் ஆணைகுழுவிடம் கொடுக்கப்பட்ட புகார் நகல் **(வா.ச.ஆ.3 ஆக குறீயிடு செய்யப்படுகிறது)**.

5. 18.06.2018 – 1ம் வாதி ஏற்காடு காவல் நிலையத்தில் கொடுத்த புகார் நகல் **(வா.ச.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

6. 20.06.2018 – ஏற்காடு காவல் ஆய்வாளருக்கு 1ம் வாதி பதிவு தபாலில் அனுப்பிய புகார் அலுவலக நகல் **(வா.ச.ஆ. 5 ஆக குறியீ செய்யப்படுகிறது)**.

7. 22.06.2018 – புகாரினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் நகல் - **(வா.ச.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

8. 23.06.2018 – 1ம் வாதி கொடுத்த புகாருக்கு ஏற்காடு போலிசார் கொடுத்த CSR அசல் நகல் - **(வா.ச.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

9. 09.11.2020 1ம் வாதியின் பெயருக்கு தாவா சொத்திற்கு கொடுக்கப்ட்ட வீட்டு வரி ரசீது அசல் நகல் - **(வா.ச.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

10. 31.03.2022 – 1ம் வாதியின் பெயருக்கு தாவா சொத்திற்கு கொடுக்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் நகல் - **(வா.ச.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

வழக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தற்போது ஒத்திவைக்கப்படுகிறது.

Take down by me in the open court to the presence of the Accused. Read over to the witness and admitted by him to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 06.04.20203

| | | |
|---|---|---|
| Case No. | : | OS.43/2022 |
| Deposition of Witness for Prosecution | : | PW.1 |
| Name | : | ஆஷா |
| தந்தை பெயர் | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of April 2023

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) என் தாத்தாவின் பெயர் சித்தன் என்றால் சரிதான் . என் பாட்டியின் பெயர் சின்னபொன்னு என்றால் சரிதான் . என் பாட்டி தாத்தாவிற்கு பிறந்தவர்கள் எனது அப்பா பழனிசாமி, எனது பெரியப்பா மணி, மற்றும் அத்தை அமராவதி என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா மற்றும் பாட்டிக்கு பாத்தியப்பட்டது. என் தாத்தா பாட்டிக்கு பாத்தியப்பட்டதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எனது திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 14 வருடங்களாகிவிட்டது. நான் எங்கு குடியுள்ளேன் என்றால் நாகலூாரில் குடியிருந்து வருகிறேன் . எனது கணவரின் பெயர் என்ன என்றால் கண்ணன் . திருமணம் நடைபெற்ற பின்னர் நாகலூாரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான் . எனது தங்கை 2ம் வாதி பிரியாவும் கடந்த 5 வருடங்களாக எனது ஈரோட்டில் உள்ள சித்தி வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான் . எனது அம்மா பழனியம்மாள் நாகலூாரில் என்னுடன் இருந்து வருகிறார் என்றால் சரிதான் . எத்தனை வருடங்களாக எங்களுடன் உள்ளார் என்றால் 20 வருடங்களாக எங்களுடன் இருந்து வருகிறார்.

3) எங்களுக்கும் என் அப்பாவிற்கும் நீண்ட நாட்களாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான் . என் அப்பா என் அம்மாவை விட்டுவிட்டு கேரளாவில் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கேரளாவில் வசித்து வருகிறார் என்றால்

சரிதான். என் அப்பா கேரளா சென்று 10 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். தாவா சொத்தின் அளவு என்னவென்றால் மொத்தம் 1350 சதுரடி, அதில் எங்கள் குடும்பத்திற்கு 675 சதுரடிகள் மற்றும் எனது பெரியப்பா குடும்பத்திற்கு 675 சதுரடிகள் பிரிக்கப்பட்டது. சொத்து பிரித்ததற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து அரசு புறம்போக்கு நிலம், பட்டா கிடையாது என்றால் சரிதான்.

4) எனது பாட்டி வழக்கு சொத்தை எப்போது எங்கு எழுதிக்கொடுத்தார் என்றால் தேதி ஞாபகமில்லை, சேலத்தில் நோட்டரி வக்கில் மூலமாக எழுதிக்கொடுத்தார். 27.01.2016ம் தேதி மேற்கண்ட வழக்கு சொத்து தான செட்டில்மெண்ட் செய்துகொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கான பத்திரம் 17.11.2015ம் தேதி வாங்கப்பட்டது என்றாலும், அதனை வாங்கியது எனது பாட்டி என்றாலும் சரிதான். எங்கு வைத்து கையொப்பம் செய்தோம் என்றால் சேலத்தில் வைத்து கையொப்பம் செய்தோம், எங்கு என்று தெரியாது. யாரெல்லாம் கையொப்பம் செய்தோம் என்றால் நான், எனது தங்கை, பெரியம்மா மற்றும் பெரியப்பா ஆகியோர் கையொப்பம் செய்தோம். வேறு யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் சாட்சி கையொப்பம் செய்தார்கள். சாட்சி கையொப்பம் யார் செய்தார்கள் என்றால் ஞாபகமில்லை.

5) அன்றைய தினம் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு எப்போது சென்றோம் என்றால் காலை 11 மணிக்கு சென்றோம். 27.01.2016ம் தேதி தான் வழக்கறிஞர் முன்பாக நாங்கள் கையொப்பம் செய்து, வழக்கறிஞர் சான்று கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு 19.02.2016-ல் நோட்டரி வழக்கறிஞர் வா.சா.ஆ.1-ல் கையொப்பமிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது பாட்டி எழுதிக்கொடுத்த பத்திரத்தில் கதவு எண்.29/42 என்றுள்ளது என்றால் சரிதான். அதற்கு வரி விதிப்பு எண்.618 என்றால் சரிதான். நான் சொல்லிய விபரங்களைத்தான் நீதிமன்றத்தில் வழக்காக தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.2, வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9-களில் கதவு எண்.6/24 என்றும், வரி விதிப்பு எண்.15919 என்றுள்ளது என்றால் சரிதான்.

6) என் பாட்டி இறந்த ஆண்டு என்ன என்றால் 2017. பிரதிவாதி மீது சேலம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அங்கு விசாரித்து இருவரின் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதா என்றால் சரிபார்க்கப்பட்டது. அங்கு நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள சொல்லி திருப்பி அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நாங்கள் பிரதிவாதி மீது ஏற்காடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் பிரதிவாதி மீதும், என் அப்பாவின் மீதும் புகார் கொடுத்தேன். அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள், இது உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்றனர். பிரதிவாதி தாக்கல் செய்த நிரூபண

வாக்குமூலத்தில் என்னென்ன சங்கதிகள் உள்ளன என்று வழக்கறிஞர் மூலம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

(பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

Take down by me in the open court to the presence of the Accused. Read over to the witness and admitted by him to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.